உடனிணைக்கிறீர்கள். மாற்று ஏற்பாடு செய்வது 2 மணி நேரத்தில் செய்துவிடலாம். ஒரே ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் கூட அந்தக் கடைக்காரர்களை உடனே அப்புறப்படுத்திவிடலாம். அப்படி இருந்தும்கூட மாதக் கணக்கிலே 9 வது மாதத்திலே மாண்புமிகு என்.ஜி. வேணுகோபால் அவர்கள், ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட கடிதம் கொடுத்திருக்கிறார்கள். நானும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் வலியுறுத்தி வருகிறோம். இருந்தும்கூட முனிசிபல் கமிஷனர் அவர்களும் மற்றவர்களும் இன்னும் காலதாமதம் செய்துகொண்டிருப்பது, அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு பெருத்த மனக்கொதிப்பை ஏற்படுத்தி பேரணி நடத்தினார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். பல தொண்டு நிறுவனங்கள் எல்லாம் பல கோரிக்கைகளை வைத்திருந்தும் கூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கவும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் அதை எப்படியாவது அப்புறப்படுத்தி அங்கே போக்குவரத்து இடையூறு இருப்பதை நீக்கிக்கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தில் மட்டும் இதுபோன்று ஆக்கிரமிப்புகள் நடைபெறவில்லை. தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு நகரங்களிலே எல்லாம் சாலை ஓரங்களில் சிறு வியாபாரிகள் எல்லாம் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்காகக் கடைகளை வைத்திருக்கிறார்கள். இதுபற்றி என்னுடைய மானியக் கோரிக்கையிலே பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்க இருக்கிற காரணத்தினால், இதிலே விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

(ஆ) வேடசந்தூர் தாலுகா மிதுக்கம்பட்டியில் உள்ள குட்வில் டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளர்கள் உண்ணாவிரதத்தைக் காவல் துறையினர் தடுப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

* **திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தாலுகா மிதுக்கம்பட்டியில் உள்ள குட்வில் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் அரசு ஆணையை அமல்படுத்தக் கோரி உண்ணாவிரதம் இருக்கும் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கவிடாமல் காவல் துறை தடுத்து வருவதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மாண்புமிகு திரு. சே. ரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

குட்வில் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் 27-3-1991 அன்று 9072 கதிர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் மொத்தம் 160 பேர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் பயிற்சியாளர்கள். இந்நிறுவனத்தில் ஆரம்பத்தில் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் மட்டும் இயங்கி வந்தது. பின்னர் என். எல். ஓ. தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அரசு ஆணைப்படி இடைக்கால நிவாரணம் மற்றும் ஒட்டு மொத்தத் தொகை ஆகியவற்றைக் கோரி 11-3-1993 முதல் சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். இதில் அனைவரும் பங்கு கொண்டுள்ளனர்.

வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே 26-3-93 அன்று முதல் சி.ஐ.டி.யு. உறுப்பினர்கள் தொடர் உண்ணாவிரதம் தொடங்கி உள்ளனர். அன்று இரவு 10-15 மணியளவில் பணிபுரிய விருப்புமுள்ள பணியாளர்களை நிர்வாகம் ஒரு வேனில் ஏற்றிக்கொண்டு தொழிற்சாலையின் உள்ளே செல்ல முற்பட்டபோது நுழைவுவாசலின் அருகே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு இருந்த சில தொழிலாளர்கள் வேனுக்குத் தீ வைத்துக் கொளுத்த முயற்சி செய்ததாகவும் இதனால் வேனுக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லையென்றாலும் இந்நிகழ்ச்சியின் போது ஒருவர் காயமடைந்தார் என்வும் இது தொடர்பாக காவல் துறைக்கு நிர்வாகம் புகார் அளித்துள்ளது.

தற்போது 110 தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும் நிர்வாகம் 91 தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த இடைக்கால நிவாரணம் அளித்துள்ளது எனவும் ஒட்டு மொத்தத் தொகையைப் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு அது வழங்கப்

பட்டுவிட்டதாகவும் 1-8-92க்-குப் பிறகுப் பணியில் சேர்ந்த தொழிலாளர்கள் ஒட்டு மொத்தத் தொகையைப் பெறத் தகுதியற்றவர்கள் என்பதால் அவர்களுக்கு வழங்கவில்லை எனவும் நிர்வாகத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உண்ணாவிரதம் ஏதும் நடைபெறவில்லை என்றும் சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை குறித்து திண்டுக்கல் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்ட இந்த அறிக்கையில் ஒரு சில விஷயங்கள் உண்மைக்குப் புறம்பாக உள்ளன. அரசு அந்த ஆலையினுடைய நிர்வாகம் சம்பந்தமாக முழுமையும் விசாரித்து ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணையை அமல்படுத்தாமல் இருந்ததனுடைய விளைவாக அந்தத் தொழிலாளர்கள் அரசால் அறிவிக்கப்பட்ட இந்த ஆணையை அமல்படுத்தவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த உண்ணாவிரதத்தைக் கலைப்பதற்காக அடியாட்களை வெளியிலே இருந்து கொண்டு வந்து கலைத்தார்கள். அதற்கு காவல் துறை உடந்தையாக இருந்ததே தவிர அந்த ஆலைக்குப் பணியாளர்களைக் கொண்டு வரவில்லை. ஆகவே இப்படி ஆலைக்கு உடந்தையாக இருந்த அந்த அடியாட்கள் மீதும் அந்த ஆலை நிர்வாகத்திற்கு உடந்தையாகப் பணியாற்றுகின்ற காவல்துறை மீதும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்படி அந்த ஆலைத் தொழிலாளர்கள் திரும்ப வேலைக்கு சென்றபோதுதான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்ததாக வந்திருக்கிறது. வெளியாட்கள் யாரும் அங்கே சென்றபோது இப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவோ, வெளியாட்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவோ எந்தத் தகவலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்படி அரசினுடைய ஆணையை மதிக்காத, அமல்படுத்தாத அந்த ஆலையின் நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுத்து அந்த ஆலையை அரசு மேற்கொண்டு நடத்துவதற்கு முயற்சி எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆலைகளையும் அரசு ஏற்று நடத்துவது என்பது இயலாத ஒரு காரியம். அரசு உத்தரவுகளை ஏற்றுக்கொள்ளாத ஆலைகள்மீது அந்த உத்தரவுகளை அமல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின்கீழ் 1993–94 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS